NOOLAHAM
FOUNDATION

# யாழ்ப்பாணப் பாடசாலைகளை ஆவணப்படுத்தல் செயற்றிட்டம்
# 2018

www.noolahamfoundation.org

| | |
|---|---|
| செயற்றிட்ட தலைப்பு | யாழ்ப்பாணப் பாடசாலைகளைகளை ஆவணப்படுத்தல் செயற்றிட்டம் 2018 |
| செயற்றிட்ட எண் | NF/PG/2018/0002 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்ட காலம் | 2018 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகள் , கலாமணி பரணீதரன் (களப்பணி), நூலக நிறுவனம் |

## நூலக நிறுவனம்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. அத்துடன் பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளையும் நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

## செயற்றிட்டச் சுருக்கம்

நூலக நிறுவனம் முன்னெடுக்கும் ஆவணப்படுத்தலின் ஒரு பகுதியாக யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்ற பாடசாலைகளின் ஆவணங்களை பெற்று அவற்றை எண்ணிமப்படுத்தி ஆவணப்படுத்தும் நோக்கில் 2018 ஆம் ஆண்டு இச்செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டது.

## அறிமுகமும் பின்புலமும்

பாடசாலைகளின் வெளியீடுகளை ஆவணப்படுத்துவதனூடாகப் பாடசாலைகளின் வரலாறுகளைப் பதிவு செய்யும் முயற்சிகள் நூலக நிறுவனத்தால் 2013 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டன. பொதுவாக ஈழத்துப் பாடசாலைகளில் ஆவணக் காப்பகங்களை பேணும் மரபு இல்லை. பாடசாலைகள் தொடர்பான தகவல்கள் குறித்த பாடசாலைகளின் ஆண்டறிக்கைகள், அதிபர் அறிக்கைகள், மாணவர் கழகங்களும் சங்கங்களும் வெளியிடும் மலர்கள், பழைய மாணவரின் வெளியீடுகள், வெள்ளிவிழா மலர்கள், பொன்விழா மலர்கள், நூற்றாண்டு மலர்கள் போன்றவற்றிலேயே காணப்படுகின்றன. ஆயினும் இத்தகைய வெளியீடுகள் கூடப் பாடசாலைகளில் பேணப்படுவது குறைவாக உள்ளது. அவ்வாறு பேணப்படும் ஆவணங்கள் கூட அனைவருக்கும் கிடைக்கும் வகையில் இருப்பதில்லை.

அவ்வகையில் நூலக நிறுவனத்தால் தொடங்கப்பட்ட பாடசாலைகளை ஆவணப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தினூடாக 2013 இல் கொழும்பு றோயல் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் வெளியீடுகளும் 2014 இல் வேம்படி மகளிர் கல்லூரியின் வெளியீடுகளும் 2017-18 காலத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் வெளியீடுகளும் ஆவணப்படுத்தப்பட்டன. ஆயினும் இந்தப் பாடசாலைகளது வெளியீடுகளும் முழுமையாக ஆவணப்படுத்த முடியவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதாவது பாடசாலைகளில் எஞ்சியுள்ள ஆவணங்களை இலகுவாகப் பெற்று ஆவணப்படுத்தக்கூடிய அதேவேளை பாடசாலைகளில் பேணப்படாத ஆவணங்களைத் தேடி ஆவணப்படுத்துவதே சவாலானதாக அமைந்தது. அவ்வகையில் இலகுவாகக் கிடைக்கக் கூடிய அனைத்து

வெளியீடுகளையும் ஆவணப்படுத்தி வைத்துக் கொள்ளல் முழுமைப்படுத்துவதற்கான செயற்றிட்டங்களுக்களை இலகுபடுத்தும் என்பது அடையாளங் காணப்பட்டது.

## இலக்குகளும் நோக்கங்களும்

யாழ்ப்பாண பாடசாலைகளின் ஆவணங்களை ஆவணப்படுத்தல் திட்டமானது பாடசாலைகளின் முக்கிய ஆண்டுமலர்கள், சிறப்பிதழ்கள், பழைய மாணவர் கழக அறிக்கைகள் மற்றும் பாடசாலைகளின் வெவ்வேறு வெளியீடுகளின் முக்கியத்துவத்தை அறிந்து அவற்றை முழுமையாக ஆவணப்படுத்தி பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் வரலாற்று ஆய்வுக்கும் பயன்படக் கூடிய வகையில் எண்ணிமப்படுத்தலை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. தனியே குறித்த பாடசாலைகளை என்றில்லாமல் எல்லாப் பாடசாலைகளையும் அணுகி அவர்களிடம் கிடைக்கக் கூடிய அனைத்து வெளியீடுகளையும் ஆவணப்படுத்துவதாக இந்தச் செயற்றிட்டம் அமைந்தது. அந்த வகையில் பாடசாலைகளை முழுமையாக ஆவணப்படுத்துவதற்கான எதிர்காலச் செயற்றிட்டங்களுக்கான அத்திவாரமாக இச்செயற்றிட்டம் திட்டமிடப்பட்டது.

## செயற்பாடுகள்

- பாடசாலைகளை அடையாளப்படுத்தல், அனுமதி பெறல்.
- பாடசாலை சமூகத்தினருடன் உரையாடுதல், ஆவணங்களை அடையாளங் காணல்.
- ஆவணங்களை பெற்றுக்கொள்ளல், வகைப்படுத்தல், பட்டியலிடல், சரிபார்த்தல்
- எண்ணிமப்படுத்தல், இணையத்தில் வெளியிடல்.
- ஆவணங்களையும் ஆவணங்கள் அடங்கிய இறுவட்டுக்களையும் பாடசாலைகளுக்கு மீள ஒப்படைத்தல்.

## அடைவுகள்

- பாடசாலைகளின் வரலாறு, மரபுரிமை தொடர்பான விழிப்புணர்வையும் மதிப்புணர்வையும் மேம்படுத்த முடிந்தது
- பாடசாலையின் நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்பாடுகள் ஓரளவு ஆவணப்படுத்தப்பட்டன.
- பாடசாலை ஆவணங்களை அடுத்த தலைமுறையினருக்காக எண்ணிமப்படுத்தி பாதுகாக்க முடிந்தது.
- பாடசாலைகளில் நூலக நிறுவனம் தொடர்பான அறிமுகப்படுத்தப்பட்டது.

## எதிர்கொண்ட சவால்கள்

- பாடசாலைகளில் அனுமதி பெற்றுக்கொள்வதில் கால தாமதம் ஏற்பட்டது. குறிப்பாக ஆவணப்படுத்தல் தொடர்பான அறிமுகமோ விழிப்புணர்வோ பாடசாலைச் சமூகங்களில் குறைவாக இருந்தது.
- பல பாடசாலைகளில் அவர்கள் வெளியிட்ட ஆவணங்களோ அவை தொடர்பான தகவல்களோ கூடப் பேணப்பட்டிருக்கவில்லை.
- சில பாடசாலைகளில் அனுமதி கிடைத்து ஆவணங்கள் அடையாளங் காணப்பட்டபோதும் கூட அந்த ஆவணங்களைக் கிடைக்கச் செய்யாத அக்கறையின்மை இருந்தது.
- ஆவணங்கள் இலாப நோக்கத்திற்காக பெறப்படுகின்றன என்ற சந்தேகம் சில பாடசாலைகளில் காணப்பட்டது.
- ஆவணப்படுத்துவதால் தமக்கு ஏதும் சிக்கல்கள் ஏற்படுமோ என்ற தயக்கமும் சில இடங்களில் காணப்பட்டது.
- தொடர்பாடல் சிக்கல்கள் இருந்தன.

## கற்றல்களும் பரிந்துரைகளும்

- சமூக மட்டத்தில் ஆவணப்படுத்தல் சார்ந்த விழிப்புணர்வு விரிவாக ஏற்படுத்தப்பட வேண்டும்.
- நூலகம் நிறுவனம் தொடர்பாகவும் அதன் செயற்பாடுகள் தொடர்பாகவும் சமூகத்தில் பரவலாக அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது.
- கல்வித்திணைக்களங்கள் ஊடாக அனுமதிக் கடிதத்துடன் எதிர்காலச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுவது இலகுவாக இருக்கும்.

- பழைய மாணவர் சங்கங்களுடன் இணைந்து செயற்படுவது பாடசாலைகளில் கிடைக்காத ஆவணங்களை இணைக்க உதவும்.
- அச்சுவடிவ ஆவணங்களைத்தாண்டி பல்லூடக ஆவணப்படுத்தற் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- இச்செயற்றிட்டத்தில் குறிப்பிடத்தக்க ஆவணங்கள் கிடைக்கப்பெற்ற பாடசாலைகளையும் அவற்றின் பழைய மாணவர் சங்கங்களையும் அணுகி குறித்த பாடசாலைகளை முழுமையாக ஆவணப்படுத்தும் செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.
- ஆவணப்படுத்தப்பட்ட பாடசாலைகள், அவற்றின் வெளியீடுகள் தொடர்பாக சமூக வலைத்தளங்களில் பரவலாக்குவதன் மூலம் விடுபட்ட வெளியீடுகளையும் பாடசாலைகளையும் உள்ளீர்க்கலாம்.
- யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வெளியே இத்தகைய பாடசாலைகளை ஆவணப்படுத்தும் செயற்றிட்டங்களை விரிவாக்க வேண்டும்.

## பின்னிணைப்பு: பாடசாலைகளும் கிடைத்த ஆவணங்களும்

1. கோப்பாய் கிறித்தவக் கல்லூரி (26 ஆவணங்கள்)
2. யாழ் திருக்குடும்பக்கன்னியர் மடம் (58ஆவணங்கள்)
3. காரைநகர் இந்துக் கல்லூரி (11 ஆவணங்கள்)
4. மண்கும்பான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை(1 ஆவணம்)
5. புனித அந்தோனியார் கல்லூரி (27 ஆவணம்)
6. அல்லைப்பிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை (4 ஆவணங்கள்)
7. அராலி இந்துக் கல்லூரி (3 ஆவணங்கள்)
8. நாராந்தனை கணேச வித்தியாலயம் (1 ஆவணம்)
9. நாராந்தனை றோ.க. மகா வித்தியாலயம் (1ஆவணம்)
10. கொட்டடி நமசிவாய வித்தியாலயம் (1ஆவணம்)
11. வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம் (1ஆவணம்)
12. ஹாட்லிக் கல்லூரி (20 ஆவணங்கள்)
13. யாழ்ப்பாணம் சோமாஸ்கந்தாக் கல்லூரி (10 ஆவணங்கள்)
14. காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி (9 ஆவணங்கள்)
15. தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை (5 ஆவணங்கள்)
16. யாழ்ப்பாணம் வேலாயுதம் மகா வித்தியாலயம் (3ஆவணங்கள்)
17. புற்றளை மகா வித்தியாலயம் (6ஆவணங்கள்)
18. வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி (29 ஆவணங்கள்)
19. மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை (6ஆவணங்கள்)
20. சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி (6 ஆவணங்கள்)
21. இணுவில் மத்திய கல்லூரி (12 ஆவணங்கள்)
22. கொக்குவில் ஸ்தான சி. சி. த. க. பாடசாலை (7 ஆவணங்கள்)
23. யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரி (22 ஆவணங்கள்)
24. யாழ்ப்பாணம் சன்மார்க்க மகா வித்தியாலயம் (1ஆவணம்)
25. மயிலிட்டி வடக்கு கலைமகள் மகாவித்தியாலயம் (3ஆவணங்கள்)
26. பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை (4ஆவணங்கள்)
27. பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம் (1ஆவணம்)
28. பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி (2ஆவணங்கள்)
29. அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் (5 ஆவணங்கள்)
30. யாழ். இந்து மகளிர் கல்லூரி (37 ஆவணங்கள்)
31. இளவாலை மகா வித்தியாலயம் (3 ஆவணங்கள்)
32. கரவெட்டி வதிரி திரு இருதயக் கல்லூரி (7 ஆவணங்கள்)
33. யாழ்ப்பாணம் வட இந்து ஆரம்பப் பாடசாலை (2 ஆவணங்கள்)

34. யாழ்ப்பாணம் கலட்டி றோ. க. த. க. பாடசாலை (6 ஆவணங்கள்)
35. திக்கம் சித்த விநாயகர் வித்தியாலயம் (6 ஆவணங்கள்)
36. தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் (1 ஆவணம்)
37. அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை (2 ஆவணங்கள்)
38. கரவெட்டி கரணவாய் தாமோதர வித்தியாலயம் (8 ஆவணங்கள்)
39. கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம் (19 ஆவணங்கள்)
40. உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி (45 ஆவணங்கள்)
41. உடுப்பிட்டி மகளிர் கல்லூரி (24 ஆவணங்கள்)
42. பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் (4 ஆவணங்கள்)
43. மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் (21 ஆவணங்கள்)
44. புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம் (1 ஆவணம்)
45. ஊர்காவற்றுறை புனித மரியாள் றோமன் கத்தோலிக்க பெண்கள் வித்தியாலயம் (2 ஆவணங்கள்)
46. புங்குதுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தியாலயம் (1 ஆவணம்)
47. புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் மகா வித்தியாலயம் (2 ஆவணங்கள்)
48. புங்குடுதீவு இராஜேஸ்வரி தமிழ் கலவன் பாடசாலை (1 ஆவணம்)
49. புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம் (1 ஆவணம்)
50. புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை (1 ஆவணம்)
51. கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம்(1ஆவணம்)
52. கரணவாய் மணியகரன் தோட்டம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை (4 ஆவணங்கள்)
53. வரணி மத்திய கல்லூரி (12 ஆவணங்கள்)
54. மயிலிட்டி றோ.க.த.க. பாடசாலை (1 ஆவணம்)
55. மண்டைதீவு றோ.க.வித்தியாலயம் (1ஆவணம்)
56. கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலை (1 ஆவணம்)
57. கோப்பாய் தெற்கு கந்தவேள் பாடசாலை (1 ஆவணம்)
58. கரம்பை அ. மி.த.க. பாடசாலை (1 ஆவணம்)
59. இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை (2 ஆவணங்கள்)
60. கரம்பைக்குறிச்சி அ. த. க. பாடசாலை (2 ஆவணங்கள்)
61. மிருசுவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை (7 ஆவணங்கள்)
62. மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் (12 ஆவணங்கள்)
63. சாவகச்சேரி இந்துக் கல்லூரி (1 ஆவணம்)
64. புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் (1 ஆவணம்)
65. கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம் (5 ஆவணங்கள்)
66. அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை (1 ஆவணம்)
67. கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் (3 ஆவணங்கள்)
68. செங்குந்த இந்துக் கல்லூரி (8 ஆவணங்கள்)
69. கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் (12 ஆவணங்கள்)
70. கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை (6 ஆவணங்கள்)
71. கொக்குவில் ஸ்ரீ ஞானப்பண்டித வித்தியாசாலை (10 ஆவணங்கள்)
72. மட்டுவில் கமலாசினி வித்தியாலயம் (2 ஆவணங்கள்)
73. மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயம் (1 ஆவணம்)
74. ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை (7ஆவணங்கள்)
75. உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம் (3 ஆவணங்கள்)
76. கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ணா வித்தியாசாலை (9 ஆவணங்கள்)
77. கோண்டாவில் இந்துக் கல்லூரி (1 ஆவணம்)
78. கோப்பாய் வடக்கு றோ. க. த. க. பாடசாலை (7 ஆவணங்கள்)
79. கட்டைவேலி யாக்கருவிநாயகர் வித்தியாலயம் (5 ஆவணங்கள்)
80. ஞானாசாரியார் கல்லூரி (4 ஆவணங்கள்)
81. மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம் (1 ஆவணம்)

82. மட்டுவில் தெற்கு அ.மி.த.க.வ வித்தியாலயம் (1 ஆவணம்)
83. நாவற்குழி மகா வித்தியாலயம் (28 ஆவணங்கள்)
84. மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம் (8 ஆவணங்கள்)
85. சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம் (5 ஆவணங்கள்)
86. வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம் (8 ஆவணங்கள்)
87. ஈவினை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை (1 ஆவணம்)
88. வயாவிளான் □ ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம் (1 ஆவணம்)
89. புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை (1 ஆவணம்)
90. உரும்பிராய் இந்துக்கல்லூரி (9 ஆவணங்கள்)
91. வயாவிளான் மத்திய கல்லூரி (13 ஆவணங்கள்)
92. வட்டு மத்திய கல்லூரி (4 ஆவணங்கள்)
93. ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம் (6 ஆவணங்கள்)
94. புனித ஜேம்ஸ் கல்லூரி (3 ஆவணங்கள்)
95. கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் (2 ஆவணங்கள்)
96. கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம் (2 ஆவணங்கள்)
97. கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம் (1 ஆவணம்)
98. பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம் (3 ஆவணங்கள்)
99. தோப்பு அருள்நந்தி வித்தியாலயம் (1 ஆவணம்)
100. கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் (1 ஆவணம்)
101. அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை (3 ஆவணங்கள்)
102. அச்சுவேலி மத்திய கல்லூரி (5 ஆவணங்கள்)
103. அச்சுவேலி மகா வித்தியாலயம் (1 ஆவணம்)
104. மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை (4 ஆவணங்கள்)
105. நவாலி மகா வித்தியாலயம் (2 ஆவணங்கள்)
106. நவாலி தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை (1 ஆவணம்)
107. அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை (1 ஆவணம்)
108. துணவி அ. மி. த. க. பாடசாலை (2 ஆவணங்கள்)
109. வட்டு மேற்கு அ. மி. த. க. பாடசாலை (1 ஆவணம்)
110. கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி (32ஆவணங்கள்)
111. துன்னாலை வடக்கு மெ.மி.த.க பாடசாலை (2 ஆவணங்கள்)
112. விக்னேஸ்வர ஆரம்ப பாடசாலை (1 ஆவணம்)
113. வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம் (1 ஆவணம்)
114. கொற்றாவத்தை அ. மி. த. க. பாடசாலை (1 ஆவணம்)
115. புன்னாலைக்கட்டுவன் இந்து தமிழ் கலவன் பாடசாலை (1 ஆவணம்)
116. குட்டியப்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை வயாவிளான் (1 ஆவணம்)
117. துன்னாலை காசிநாதர் வித்தியாலயம் (1 ஆவணம்)
118. மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை (30 ஆவணங்கள்)
119. திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய பாடசாலை (1 ஆவணம்)
120. கைதடி நவூல்ட் செவிப்புலன் இழந்தோர் பாடசாலை (1 ஆவணம்)
121. ஹாட்லிக் கல்லூரி பருத்துறை (6 ஆவணங்கள்)
122. வல்வை மகளிர் வித்தியாலயம் (21 ஆவணங்கள்)
123. வல்வை சிவகுரு வித்தியாசாலை (8 ஆவணங்கள்)
124. உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்(1 ஆவணம்)
125. இடைக்காடு மகா வித்தியாலயம்(3 ஆவணங்கள்)
126. பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம் (2 ஆவணங்கள்)
127. நல்லூர் தெற்கு □ ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம் (1 ஆவணம்)
128. புனித தெரேசா பெண்கள் கல்லூரி (5 ஆவணங்கள்)
129. ஆனைப்பந்தி மெதடிஸ்ற் மிஷன் வித்தியாலயம்(5 ஆவணங்கள்)

130. மல்லாகம் மகா வித்தியாலயம் (1 ஆவணம்)
131. ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை (2 ஆவணங்கள்)
132. குப்பிழான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம் (5 ஆவணங்கள்)
133. ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை (5 ஆவணங்கள்)
134. ஏழாலை மகா வித்தியாலயம் (1ஆவணம்)
135. மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை (5 ஆவணங்கள்)
136. ஏழாலை தெற்கு அ.மி.த.க பாடசாலை (2 ஆவணங்கள்)
137. ஏழாலை சிறூ முருகன் வித்தியாலயம் (4 ஆவணங்கள்)
138. ஏழாலை புனித இசிதோர் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை (1 ஆவணம்)
139. யாழ்ப்பாணம் இளையதம்பி இந்து வித்தியாலயம் (1 ஆவணம்)
140. புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயம் (1 ஆவணம்)
141. கோண்டாவில் றோ.க.த.க பாடசாலை (1ஆவணம்)
142. கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம் (2 ஆவணங்கள்)
143. கோட்டைக்காடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை (3 ஆவணங்கள்)
144. மயிலணி சைவ மகா வித்தியாலயம் (2ஆவணங்கள்)
145. அருணோதயக்கல்லூரி (19 ஆவணங்கள்)
146. அளவெட்டி தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை (1 ஆவணம்)
147. அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் (1 ஆவணம்)
148. அளவெட்டி சூனன் கலட்டி ஞானோதய வித்தியாலயம் (1 ஆவணம்)
149. அளவெட்டி சதானந்தா வித்தியாலயம் (1 ஆவணம்)
150. ஸ்கந்தவரோதயக் கல்லூரி (47 ஆவணங்கள்)
151. கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை (3 ஆவணங்கள்)
152. உடுவில் மல்வத்தை றோ.க.த.க பாடசாலை (1ஆவணம்)
153. புதுமடம் றோ.க.த.க பாடசாலை (2ஆவணங்கள்)
154. சுன்னாகம் றோ.க.த.க பாடசாலை (2 ஆவணங்கள்)
155. சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை (1 ஆவணம்)
156. சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் வித்தியாலயம் (1 ஆவணம்)
157. கைதடி கலைவாணி வித்தியாலயம் (1 ஆவணம்)
158. கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்டவித்தியாலயம் (7 ஆவணங்கள்)
159. மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் (1 ஆவணம்)
160. அளவெட்டி தெற்கு றோ.க.த.க பாடசாலை (2 ஆவணங்கள்)
161. உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலை (6 ஆவணங்கள்)
162. கூரிமலை நகுலேஸ்வரம் ம.வி (6 ஆவணங்கள்)
163. ஊரெழு கணேச வித்தியாசாலை (2 ஆவணங்கள்)
164. நடேஸ்வரக் கல்லூரி (6 ஆவணங்கள்)
165. தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி (4 ஆவணங்கள்)
166. தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாசாலை (2 ஆவணங்கள்)
167. யாழ்ப்பாணம் பரமேஸ்வரா வித்தியாலயம் (1 ஆவணம்)
168. வண்ணை நாவலர் மகா வித்தியாலயம் (4 ஆவணங்கள்)
169. தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை (14 ஆவணங்கள்)
170. நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் (1 ஆவணம்)
171. கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலை (2 ஆவணங்கள்)
172. மாதகல் சென்தோமஸ் றோ.க பெண்கள் பாடசாலை (2 ஆவணங்கள்)
173. மாதகல் சென் யோசப் மகா வித்தியாலயம் (2 ஆவணங்கள்)
174. புத்தூர் இந்து ஆரம்ப பாடசாலை (3 ஆவணங்கள்)
175. விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம் (3 ஆவணங்கள்)
176. மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை (1 ஆவணம்)
177. கொடிகாமம் அரசினர் வித்தியாலயம் (1 ஆவணம்)

178. மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயம் (2 ஆவணங்கள்)
179. கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை (4 ஆவணங்கள்)
180. மந்துவில் □்ரீபாரதி வித்தியாலயம் (4 ஆவணங்கள்)
181. மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை (3 ஆவணங்கள்)
182. விக்ரோறியாக் கல்லூரி (20 ஆவணங்கள்)
183. புனித பொஸ்கோ வித்தியாலயம் (2 ஆவணங்கள்)
184. கல்வயல் □்ரீ சண்முகானந்த வித்தியாலயம் (1 ஆவணம்)
185. சாவகச்சேரி மகளிர் கல்லூரி (7 ஆவணங்கள்)
186. கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை (6 ஆவணங்கள்)
187. உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் (1 ஆவணம்)
188. கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை (1 ஆவணம்)
189. கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி (2 ஆவணங்கள்)
190. கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் (1ஆவணம்)